# கால்நடைப் பராமரிப்புத் துறை

தமிழக மாநிலத்தின் பொருளாதாரம் வேளாண்மையை சார்ந்து உள்ளது. இங்கு வேளாண்மை மற்றும் அதனை சார்ந்த பக்க தொழில்களான கால்நடை வளர்ப் பு போன்ற விவசாயம் சார்ந்த தொழில்கள் 60% மக்களின் வாழ்வாதார மூலமாக விளங்குகிறது. சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலார்களின் குடும்ப வருமானத்திற்கு கால்நடை வளர்ப்பு ஒரு கணிசமான தொகையினை ஈட்டி தருகின்றது. கால்நடை பராமரிப்பு மற்றும் மேலாண்மையில் மேற்குறிப்பிட்ட விவசாய பண்ணை மகளிரின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. கால்நடை வளர்ப்பு தொழிலானது, ஊரக ஏழை மக்களின் பிரதான வருமான மூலமாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் இடர்பாட்டு காலங்களான வெள்ளம் மற்றும் வறட்சியின் போது அவர்தம் வாழ்வினை நிலைக்கச் செய்கிறது. கால்நடை வளர்ப்பு தொழில் பலதரப்பட்ட பின்வரும் பயன்களை கொடுக்கவல்லது – வேளாண்மைக்கான உழு திறன் அளித்தல், அங்கக உரங்கள் அளித்தல், ஆண்டு முழுவதும் குறிப்பாக பண்ணை மகளீர்க்கு சுய வேலைவாய்ப்பினை நல்குதல் மற்றும் மனித தேவைக்கான பால், இறைச்சி மற்றும் முட்டை வழங்குதல்.

## நீர்வள நிலவளத் திட்டத்தில் கால்நடைத் துறையின் நோக்கங்கள் :

1. உபவடி நிலப் பகுதிகளில் கால்நடைகளின் உற்பத்தி திறனை உயர்த்துதல்.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் இனப்பெருக்க பணி வசதிகளை விவசாயிகளின் அருகிலோ அல்லது வீட்டின் வாசலுக்கே கொண்டு சேர்த்த ல்.
3. முழுமையான கால்நடை பாதுகாப்பினை (நோய்த் தடுப்பு மற்றும் குணப்படுத்துதல்) உறுதிப்படுத்துவது.
4. மாட்டினங்களின் சினை பிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவீதத்தினை அதிகரிப்பது.
5. பசுந்தீவன தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கான இடைவெளியைக் குறைப்பது.
6. சிறந்த கால்நடை பராமரிப்பு முறைகள் / தொழில் நுட்பம் பற்றிய விவசாயிகளின் அறிவாற்றலை மேம்படுத்துவது.

## கால்நடை உற்பத்தி திறனை அதிகரிக்க மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் :

### 1. தொகுப்பு உப வடிநில கால்நடை மருத்துவ அலகு ஏற்படுத்துதல்

கால்நடை பராமரிப்புத் துறையில் கால்நடை மருத்துவ வசதி மற்றும் இனஅபிவிருத்திக்காக கால்நடை மருந்தகம் மற்றும் கிளை நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இருப்பினும் சில நீண்ட தொலைவு கிராமங்களில் இவ்வசதி கிடைப்பதில் சிரமங்கள் உள்ளன. நீர்வள நிலவளத் திட்டத்தில் 2000 இனவிருத்திக்கு தகுதியான கால்நடைகள் உள்ள நீண்ட தொலைவில் உள்ள அல்லது துறையின் சேவைகள் கிடைக்கப்பெறாத கிராமங்கள் தேர்ந்தெடுத்து இக்கிராமங்களில் வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகளின் சேவைகளைப் பயன்படுத்தி, சேவையில்லா பகுதிகளில் விவசாயிகளின் கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவ சேவை மற்றும் இனப்பெருக்க உதவி, தொகுப்பு உப வடிநில கால்நடை மருத்துவ அலகுகள் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வலகுகள் பாசன நீரினை பயன்படுத்துவோர் சங்க அங்கத்தினரின் கருத்தின் அடிப்படையில் அப்பகுதி கிராமங்களுக்கு செல்ல கால அட்டவணை தயாரித்து மருத்துவ வசதி, செயற்கை முறை கருவூட்டல் மற்றும் நோய் தடுப்பு பணிகள் விவசாயிகளுக்கு அவர்களின் பண்ணை / வீட்டின் அருகிலேயே வழங்கப்படுகிறது. கால்நடை இனஅபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான உறை விந்து குச்சிகளை இருப்பில் வைக்கவும், எடுத்துச் செல்லவும் 55 லிட்டர் திரவ நைட்ரஜன் குடுவைகள் (இரண்டு) மற்றும் அதற்கு தேவையான திரவ நைட்ரஜன் மற்றும் உறை விந்து குச்சிகள் ஆகியவையும் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.

### 2. பசுந்தீவன வளர்ப்பு

கால்நடைகளுக்கு உரிய முறையில் பசுந்தீவனங்கள் அளிப்பதால் அதன் பால் உற்பத்தி திறனை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல் சினை பிடிப்பு சதவீதத்தையும் அதிகரிக்கலாம். போதுமான அளவு பசுந்தீவனங்கள் வழங்குவதால் விலை உயர்ந்த அடர் தீவனங்கள் வழங்குவதை குறைத்துக் கொள்ளலாம். இத்திட்டத்தில் பசுந்தீவன பற்றாக்குறையை தவிர்பதற்காக விருப்பமுள்ள விவசாயிகள் தேர்வு செய்து, அவர்களுக்கு தேவையான தீவன உள்ளீடுகளான கோ – 3 புல் கரணைகள், கொழுக்கட்டை, ஸ்டைலோ மற்றும் இதர விதைகள் வழங்கி, பசுந்தீவன சாகுபடிக்குக் கொண்டுவரப்படும்.

## 3. கால்நடை மருத்துவ மற்றும் மலடு நீக்க முகாம் :

மலட்டு தன்மை மாட்டினங்களில் சினை பிடிப்பு மற்றும் கன்று பிறப்பு சதவீதங்களை பாதிக்கக் கூடியது. இதனால் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. இதனை தவிர்க்க மருத்துவ மற்றும் மலடு நீக்க சிகிச்சை முகாம்கள் திட்டமிடப்பட்டு கி ராமங்களில் நடத்தப்படும். நன்கு விளம்பரம் செய்யப்பட்ட இம் முகாம்களில் கால்நடைகளுக்கு சிகிச்சை, செயற்கை முறை கருவூட்டல், ஆண்மை நீக்கம், குடற்புழு நீக்கம், மற்றும் மலடு நீக்க சிகிச்சை பணிகள் இலவசமாக செய்யப்படும். இம்முகாம்களில் விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த கால்நடை வளர்ப்பு, புல் வளர்ப்பு, நோய் தடுப்பு பற்றிய துண்டு பிரச்சாரங்கள் வழங்கப்படும். இம்முகாம்களில் விவசாயிகளை ஊக்குவிக்க கன்றுகள் பேரணி நடத்தி சிறந்த கன்றுகளை தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்கப்படும்.

## 4. தகவல் படிப்பு, தகவல் தொடர்பு, மற்றும் பிரச்சாரங்கள்

புதிய தொழில் நுட்ப உத்திகள், கிளர்ச்சியுறும் நோய்கள் மற்றும் அதனை கட்டுப்படுத்தும் முறைகள் விவசாயிகளிடம் சென்று அடைவதே இத்திட்டத்தின் வெற்றியாகும். இத்திட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மற்றும் புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளுக்கு வழங்கவும், இத்திட்டத்தில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்படும். இக்கூட்டத்தில் விவசாயிகளுக்கு செயல்முறை விளக்கம், கால்நடை வளர்ப்பு பற்றிய தகவல் தொடர்பு கையேடு, துண்டுப்பிரச்சாரம் வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

## 5. விவசாயிகள் பயிற்சி

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிற்சி அவர்களின் தொழிலை மேம்படுத்தவும், தன்னம்பிக்கையை ஏற்படுத்திடவும் உதவும். விருப்பமுள்ள விவசாயிகளை தேர்வு செய்து கால்நடை அபிவிருத்தி, நோய் தடுப்பு மற்றம் தீவனம் வழங்குதல் பற்றிய 3 நாள் பயிற்சி கால்நடை நிலையங்களில் கால்நடை உதவி மருத்துவர் மூலம் இத்திட்டத்தில் வழங்கப்படும்.